முன்னம் குரவோர் * மொழிந்த வசனங்கள்
தன்னை * மிகக் கொண்டு கற்றோர் தம் உயிர்க்கு ** - மின் அணியாச்
சேரச் சமைத்து அவரே * சீர் வசன பூடணம் என்னும்[8]
பேர் * இக்கலைக்கு இட்டார் பின் 54

ஆர் வசன பூடணத்தின் * ஆழ் பொருள் எல்லாம் அறிவார் *
ஆர் அது சொல் நேரில் அனுட்டிப்பார் ** - ஓர் ஒருவர்
உண்டாகில் * அத்தனை காண் உள்ளமே * எல்லார்க்கும்
அண்டாதது அன்றோ அது 55

உய்ய நினைவுடையீர்! * உங்களுக்குச் சொல்லுகின்றேன் *
வைய குரு முன்னம் வாய் மொழிந்த ** - செய்ய கலை
ஆம் * வசன பூடணத்தின் ஆழ் பொருளை * கற்று அதனுக்
காம் நிலையில் நில்லும் அறிந்து 56

தேசிகர் பால் கேட்ட * செழும் பொருளைச் * சிந்தை தன்னில்
மாசறவே ஊன்ற மனனம் செய்து ** - ஆசரிக்க
வல்லார்கள் தாம் * வசன பூடணத்தின் வான் பொருளை *
கல்லாதது என்னோ கவர்ந்து 57

சச்சம்பிரதாயம் * தாம் உடையோர் கேட்டக்கால் *
மெச்சும் வியாக்கியை தான்[9] உண்டாகில் ** - நச்சி
அதிகரியும் நீர் * வசன பூடணத்துக்கு அற்ற
மதி உடையீர்! * மத்தியத்தராய் 58

சீர் வசன பூடணத்தின் * செம்பொருளை * சிந்தை தன்னால்
தேரிலுமாம் * வாய் கொண்டு செப்பிலுமாம் ** - ஆரியர்காள்!
என்தனக்கு * நாளும் இனிதாக நின்றது ஐயோ *
உந்தமக்கு எவ்வின்பம் உளதாம் 59

தன் குருவின் தாள் இணைகள் தன்னில் * அன்பு ஒன்றில்லாதார் *
அன்பு தன் பால் செய்தாலும் அம்புயை கோன் ** - இன்ப மிகு
விண்ணாடு * தான் அளிக்க வேண்டி இரான் * ஆதலால்
நண்ணார் அவர்கள் திருநாடு 60

** ஞானம் அனுட்டானம் இவை * நன்றாகவே உடையன்
ஆன * குருவை அடைந்தக்கால் ** - மாநிலத்தீர்!
தேனார் கமலத் * திருமாமகள் கொழுனன் *
தானே வைகுந்தம் தரும் 61

உய்ய நினைவு உண்டாகில் * உம் குருக்கள் தம் பதத்தே
வையும் * அன்பு தன்னை இந்த மாநிலத்தீர்! ** - மெய் உரைக்கேன்
பை அரவில் மாயன் * பரம பதம் உங்களுக்காம் *
கை இலங்கு நெல்லிக் கனி 62

---

[8] என்

[9] வியாக்கியைகள்

